## நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு

### மார்ச் - 2025 பணியறிக்கை

மார்ச் 2, ஞாயிறு மாலை 04.30 மணி முதல் 05.30 மணி வரை ஊழியர் கூட்டம் நடைபெற்றது. கத்தோலிக்க நற்செய்திகுழு அலுவலகத்தில் ஊழியர் கூடி திருச்சபைக்காக, நாட்டிற்காக செபித்தனர். மார்ச் 16, ஞாயிறு காலை 11 மணி முதல் மாலை 04.30 மணி வரை உபவாச கூட்டம் தூய அந்தோணியார் மறைமாவட்ட திருத்தல மண்டபத்தில் நடைபெற்றது. 100 பேர் கலந்து பயன்

பெற்றனர். நிறைவில் அருட்திரு. ஜெமல்ஸ் திருப்பலி நிறைவேற்றினார். தொடக்கத்தில் சகோ. வின்செண்ட் இறைசெய்தியும், சகோ. சேவியர் லூர்துசாமி நற்கருணை ஆராதனையும் நடத்தினர். அன்று தூய சவேரியார் கல்லூரியில் இயேசுவோடு ஒருநாள் சிறுவர் கொண்டாட்டம்-25 நடைபெற்றது. சென்னையில் இருந்து கடுகு விதைக் குழுவினர் சகோ. செல்வராஜ் அவர்கள் தலைமை வந்து சிறப்பாக வழிநடத்தினார். நிகழ்வில் 560 சிறுவர், சிறுமியர் கலந்து கொண்டனர். அருட்திரு. ஜீவா மற்றும் அருட்திரு. சந்தியாகு மற்றும் அருட்திரு. ஜாண்சன் திருப்பலி நிறைவேற்றினர். அருட்திரு. G. புஸ்பராஜ், செயலர் தூய சவேரியார் கல்லூரி தலைமை வகித்து பரிசுகள் வழங்கினார். மார்ச் 29, சனி இரவு முழுஇரவு திருவிழிப்பு செபம் நடைபெற்றது. சகோ.ஜேம்ஸ், தூத்துகுடி சிறப்பு செபம் நடத்தினார். அருட்திரு. ஜெமல்ஸ் திருப்பலி நிறைவேற்றினார். 150 பேர் கலந்து பயன் பெற்றனர். அனைத்து வெள்ளிகிழமைகளில் காலை 10.30 மணி முதல் மதியம் 01.30 மணி வரை குணமளிக்கும் செபம் நடைபெற்றது. கிராம ஊழியங்கள், வீட்டு செப கூட்டங்கள், Whatsapp மூலம் செப விண்ணப்பம் வழக்கம் போல் நடைபெற்றது.

ஆங்கில மாதத்தின் முதல் நாளில் 01.03.2025 சனிக்கிழமை சென்னை புனித தோமையார் மலையில் உள்ள MSFS இல்லத்தில் எழுப்புதல் பரிந்துரை செபம் நடைபெற்றது. மாதத்தின் முதல் சனி (01.03.25) தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் ஆசீர்வாத உபவாச செபமும் 2ம் சனி 08.03.25 அம்பை புனித சூசையப்பர் ஆலயத்தில் ஆசீர்வாத உபவாச செபமும், கோவில்பட்டி புனித அந்தோணியார் ஆலயத்தில் (இலுப்பையூரணி) ஆசீர்வாத உபவாச செபமும், 3ம் சனி (15.03.25) இருதயநகர், திரு இருதய ஆண்டவர் ஆலயம், நாகர்கோவில் (காரவிளை) பகுதிகளில் ஆசீர்வாத உபவாச செபம் நடைபெற்றது. மாதத்தின் 2ம் சனி புதுவாழ்வு தியான நிலையத்தில் விடுதலை திருவிழிப்பு செபம் நடைபெற்றது. பாளையங்கோட்டை மறைமாவட்ட வேதியரும், புதுவாழ்வு தியான நிலைய நிறுவனருமான சகோ.A. இருதயசாமி அவர்கள் 14.03.25 இறைவனோடு இணைந்த நிலையில் புதுவாழ்வு தியான நிலையத்தில் 16.03.25 ஞாயிறு பாளை மறைமாவட்ட மேனாள் ஆயர் A. ஜூடுபால்ராஜ் மற்றும் மறைமாவட்ட முதன்மைகுரு, செயலக முதல்வர், பொருளாளர் தந்தை மற்றும் அருட்தந்தையர்கள் தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெற்றது. இயக்கத்தின் ஆன்மீகத்தந்தையும், தென்காசி பங்குத்தந்தையும், வட்டார அதிபருமான அருட்தந்தை. போஸ்கோ அடிகளாரும் புதுவாழ்வு இயக்கத்தினரும் அடக்க நிகழ்வுகளை பொறுப்பேற்று வழிநடத்தினார்கள்.

இம்மாதத்தின் உள்ளிருப்புத் தியானம் 27-30 (வியாழன்-ஞாயிறு) தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. தினமும் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கூகுள்மீட் வழியாக எழுப்புதல் பரிந்துரை செபம் நடைபெற்று வருகின்றது. தியான நிலையத்தில் தொடர் பரிந்துரை செபமும், தொலைபேசியில் வரும் விண்ணப்பங்களுக்கு நற்கருணையில் செபித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றது. தூய ஆவியில் மாத இதழ் சுமார் 3500 குடும்பங்களுக்கு அஞ்சல் செய்யப்பட்டு நற்செய்திப்பணி நடைபெற்று வருகின்றது.

அருள்பணி V.K.S. அருள்ராஜ்
செயலர்

## குடும்ப நலவாழ்வுப் பணிக்குழு

**மார்ச் - 2025 பணியறிக்கை**

### 1) திருமண முன் தயாரிப்பு பயிற்சி

| | | |
|---|---|---|
| பங்கேற்றவர்கள் : | ஆண்கள் | - 24 பேர் |
| | பெண்கள் | - 22 பேர் |
| மொத்தம் பங்கேற்றவர்கள் | | - 46 பேர் |

### 2) திருமணத் தகவல் நிலையம்

| | |
|---|---|
| பதிவு செய்தவர்கள் | - 23 பேர் |
| பாஉவையிட்டவர்கள் | - 57 பேர் |
| திருமண ஏற்பாடாகியுள்ளோர் | - 6 பேர் |

### 3) திருமண முன் தயாரிப்பு பயிற்சி விபரம்

| | |
|---|---|
| ஏப்ரல் 2025 | 04, 05.04.2025 - முதல் வெள்ளி, சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை |
| | 25, 26.04.2025 - நான்காம் வெள்ளி, சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை |
| மே 2025 | 02, 03.05.2025 - முதல் வெள்ளி, சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை |
| | 16, 17.05.2025 - நான்காம் வெள்ளி, சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை |

குறிப்பு : ஏப்ரல் 18, 19 புனித வெள்ளி, சனியாக இருப்பதால் 25, 26 நான்காம் வாரம் பயிற்சி நடைபெறும்.

அன்புடன்,
**அருட்தந்தை ஜெமல்ஸ் ஜேம்ஸ்,**
செயலர்

# அன்பிய பணிக்குழு

## மார்ச் - 2025 பணியறிக்கை

அம்பாசமுத்திரம் மறைவட்டம் கல்லிடைக்குறிச்சி பங்கில் கிறிஸ்து பிறப்பின் யூபிலி 2025 தொடக்கவிழா 02.03.2025 ஞாயிறு அன்று கொண்டாடப்பட்டது. இதில் யூபிலி மேய்ப்புப்பணி நிலைய இயக்குநரும், அன்பியப் பணிக்குழுவின் செயலருமான அருட்பணி. அ. பீற்றர் அவர்கள் கலந்து கொண்டு திருப்பலி நிறைவேற்றினார்கள். திருப்பலியின் முடிவில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பியப் பொறுப்பாளர்கள், இறைபிரசன்னத்தில், பங்குத் தந்தையர் முன்னிலையில், பொதுமக்கள் மத்தியில் பழைய பொறுப்பாளர்களிடமிருந்து தங்கள் பொறுப்புக்களைப் பெற்றுக் கொண்டார்கள். அந்நிகழ்வில் பழையப் பொறுப்பாளர்களுக்கு நன்றியும், புதிய பொறுப்பாளர்களுக்கு வாழ்த்தும், பணிக்குழு செயலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது

தென்காசி மறைவட்டம் பாவூர்சத்திரம் பங்கில் 13 மற்றும் 15 வியாழன், சனி ஆகிய நாட்களில், 7 அன்பியங்கள் அன்பியப் பணிக்குழுவால் சந்திக்கப்பட்டன. அன்பியங்களில் புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்பிய பணிக்குழு செயலர் அவர்கள் 16.03.2025 ஞாயிறு அன்று திருப்பலி நிறைவேற்றி அன்பியத்தில் மக்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாடு குறித்துப் பேசினார்கள். திருப்பலி முடிந்தவுடன் அன்பியப் பொறுப்பாளர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இதில் அன்பியப் பொறுப்பாளர்கள் உற்சாகப்படுத்தப்பட்டனர். மேலும் அன்பியங்கள் சிறப்பாக செயல்படும் பொருட்டு ஆலோசனைகள் அன்பியப் பணிக்குழுவினரால் வழங்கப்பட்டன.

பாளையங்கோட்டை மறைமாவட்ட அருட்பணிக் குழுக்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நமது மறைமாவட்ட ஆயர் மேதகு முனைவர். S. அந்தோனிசாமி D.D.,D.C.L., அவர்கள் தலைமையில் 24.03.2025 திங்கள் காலை 10 மணிக்கு யூபிலி மேய்ப்புப்பணி நிலையம், தேம்பாவணி தோட்டத்தில் வைத்து நடைபெற்றது. இதில் பணிக்குழு செயலர் அருட்பணி. அ. பீற்றர் அவர்கள் கலந்து கொண்டு டிசம்பர் 2024 முதல் மார்ச் 2025 வரையிலான அறிக்கையினை சமர்ப்பித்தார்கள்.

**அருட்பணி. அ. பீற்றர்**

செயலர்

# வேதியர் அ. இருதயசாமி, இயேசுவின் சீடர், நற்செய்திப் பணியாளர்



பாளையங்கோட்டை மறைமாவட்ட கருத்தப்பிள்ளையூர் என்ற கிராமத்தில் 21.07.1961 ஆண்டு திரு.அந்தோணி, திருமதி. மரிய புஷ்பம் என்ற பெற்றோருக்கு நான்கு பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளையாக பிறந்தார். இவர் குழந்தை தெரசு பூமாலை செல்வி என்பவரை துணைவியாகக் கொண்டிருந்தார். இவருக்குப் பிறந்தது நான்கு பெண் குழந்தைகள். தாய் தகப்பனை இழந்த ஒரு பெண் குழந்தையை ஐந்தாவது குழந்தையாக வளர்த்தார். தன்னுடைய மூத்த மகளை கிளாரா ஆராதனை அருள்சகோதரிகள் மடத்திற்கு அனுப்பியுள்ளார்.

இவர் திண்டிவனம் வேதியர் பயிற்சியைப் பெற்று பேட்டை, ஊத்துமலை, தென்காசி, யூபிலி மேய்ப்புப்பணி நிலையம் ஆகிய இடங்களில் வேதியராக பணிபுரிந்தார். மாபெரும் யூபிலி 2000 தயாரிப்புப் பணிகளில் தீவிரமாக பணி செய்தவர். 1997 ஆம் ஆண்டில் புதுவாழ்வு செபக்குழு என்ற பொதுநிலையினரின் அமைப்பாக மேதகு ஆயர் ச. இருதயராஜ் அவர்களின் ஆசியுடன் தொடங்கினார். மறைமாவட்டப் பங்குகளில் புதுவாழ்வு செபக்குழுக்களை உருவாக்கினார். 2008 ஆம் ஆண்டு மேதகு ஆயர் ஆ. ஜூடு பால்ராஜ் அவர்களின் ஆசியுடன் மத்தளம்பாறை புதுவாழ்வு தியான மையம் உருவாக்கப்பட்டது. அதே வேளையில் புதுவாழ்வு அறக்கட்டளையும் உருவாக்கப்பட்டது.

சகோதரரின் இறையனுபவம் ‘சீடராவோம், சீடரை உருவாக்குவோம்” என்ற மேலான விருதுவாக்கோடு பாளை மறைமாவட்டம், தமிழகம், இந்தியா எல்லையைக் கடந்து இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களிலும் நற்செய்தியை அறிவித்தார். இவர் பல முழுநேர தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களை உருவாக்கினார்.

இப்போதைய பாளை மறைமாவட்ட மேதகு ஆயர் ச. அந்தோணிசாமி அவர்களின் ஆசியாலும், உற்சாகத்தாலும், நற்செய்திப்பணியை மிகவும் உற்சாகமாகச் செய்து வந்தார். எப்போதும் குருக்களை மதிப்பதும்,

திருச்சபையின் போதனைகளுக்குப் பணிந்து நடப்பதும் இவரது இரு கண்களாக கொண்டிருந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் தியான நிலையத்தின் வாயிலாக புதுவாழ்வு பெற்று கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்துள்ளார்கள். பொதுநிலையினரின் நற்செய்திப் பணிக்கு ஒரு சிறந்த இடமாக புதுவாழ்வு தியானமையம் விளங்குகிறது. தன்னுடைய உடல்நிலையையும் பொருட்படுத்தாது நற்செய்திப்பணி செய்த ஒரு நல்ல பணியாளர். 14.03.2025 அன்று இறைவனோடு தன்னை இணைத்துக்கொண்டார். இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போம். அவருடைய குடும்பத்தினருக்கும், இவரோடு இணைந்துப் பணியாற்றிய அனைத்து நற்செய்திப் பணியாளருக்கும் பாளை மறைமாவட்டம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**அருள்பணி ச. அந்தோணி ராஜ்**

**ஆன்மீக இயக்குநர் புதுவாழ்வு தியானமையம்**

## மேய்ப்புப் பணி பேரவைக் கூட்டம்
## பாளையங்கோட்டை மறைமாவட்டம்

### மார்ச் - 2025 பணியறிக்கை

பாளையங்கோட்டை மறைமாவட்ட மேய்ப்புப்பணி பேரவை பொதுக்குழு கூட்டம் 08.03.2025 சனிக்கிழமை காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை மேதகு ஆயர் முனைவர். S. அந்தோனிசாமி D.D., D.C.L., அவர்கள் தலைமையில் யூபிலி மேய்ப்புப்பணி நிலையம், தேம்பாவணித் தோட்டத்தில் வைத்து நடைபெற்றது. அன்றைய நாளில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியை ஒளி ஏற்றி துவங்கி வைக்கும் விதமாக முதல் திரியை மேதகு ஆயர் அவர்களும் இரண்டாம் திரியை அருட்சகோதரி. ரோஸம்மா ICM அவர்களும், மூன்றாம் திரியை பெண்கள் பணிக்குழுவின் செயலர் திருமதி. லில்லி ஆனந்த் அவர்களும், நான்காவது திரியை சாந்திநகர் பங்கைச் சார்ந்த திருமதி. ரோசாரி தாமஸ் அவர்களும் ஏற்றினார்கள். தென்காசி பங்கைச் சார்ந்த திருமதி. இருதய ஜோஸ்பின் புனிதா அவர்கள் இறைவணக்கப் பாடல் பாடினார்கள். மகாராஜநகர் பங்கைச் சார்ந்த திருமதி. மேரி ஜோஸ்பின் அவர்கள் நற்செய்தி வாசித்தார்கள். கோவில்பட்டி பங்கைச் சார்ந்த திருமதி.ஜெயமேரி அவர்கள் இறைவேண்டல் செய்தார்கள். சாந்திநகர் பங்கைச் சார்ந்த திருமதி ஜோஸ்பின் பாபு

அனைவரையும் வரவேற்று பேசினார்கள். மேய்ப்புப்பணி பேரவையின் இணைச் செயலர் திருமதி. மேரி இந்திரா அவர்கள் கடந்த கூட்ட அறிக்கையை வாசித்தார்கள்.

முதல் அமர்வில் "யூபிலி 2025 - திருஅவையில் கொண்டாட்டங்களும், எதிர்பார்ப்பும்" என்ற தலைப்பில் மேதகு ஆயர் முனைவர். S. அந்தோனிசாமி D.D.,D.C.L., அவர்கள் கருத்துரை வழங்கினார்கள். தேநீர் இடைவேளைக்குப் பிறகு இரண்டாம் அமர்வில் இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் விவிலியப் பணிக்குழு செயலர் அருள்பணி.முனைவர்.யேசு கருணாநிதி அவர்கள் 'செயற்கை நுண்ணறிவும், கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வும்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார்கள். அதன் பிறகு, செயற்கை நுண்ணறிவைப் பற்றி உறுப்பினர்கள் எழுப்பிய வினாக்களுக்கு, தந்தை அவர்கள் விளக்கமளித்தார்கள். மேய்ப்புப்பணி பேரவைக் கூட்டம் மிகவும் பயனுள்ளதாய் அமைந்தது. இதில் மறைமாவட்ட அளவில் 90 உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மரியாயின் சேனை கொமித்சிய தலைவி திருமதி.நிர்மலா ஜார்ஜ் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். வல்லம் பங்கைச் சார்ந்த திருமதி.மேரி கிரேஸ் திலகம் அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்கள்.

திரு.ஜேம்ஸ் பாஸ்கர்
செயலர்

## அருட்பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்புக் கூட்ட அறிக்கை

**24.03.2025**

நமது பாளையங்கோட்டை மறைமாவட்ட மேய்ப்புப்பணி குழுக்களின் ஒருங்கிணைப்புக் கூட்டம் 24.03.2025 திங்கட்கிழமை காலை 10.00 மணி முதல் மதியம் 1 மணி வரை யூபிலி மேய்ப்பு பணி நிலையம் தேம்பாவணித் தோட்டத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நமது மறைமாவட்ட ஆயர் மேதகு முனைவர் அந்தோனிசாமி சவரிமுத்து D.D.,D.C.L., அவர்கள் தலைமைத் தாங்கினார்கள். இக்கூட்டம் இறைவேண்டலுடன் தொடங்கியது. இறைவணக்கப் பாடல் காணொலி மூலம் ஒளிபரப்பப்பட்டது. சிறைப் பணிக்குழு செயலர் திருமதி.ஏஞ்சலா அவர்கள் நற்செய்தியை வாசித்தார்கள். கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு செயலர் அருட்பணி.சுதன் அவர்கள் இறைவேண்டல் செய்தார்கள். அதனைத் தொடர்ந்து அருட்பணி குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்

அருட்பணி. அ. பீற்றர் அவர்கள் கடந்த கூட்ட அறிக்கையை வாசித்தார்கள். இதில் 18 பணிக்குழுக்களின் செயலர்கள் தங்களது பணிக்குழுக்களின் செயல்பாடுகளை காணொலி மூலம் அறிக்கையாக சமர்ப்பித்தனர். ஒவ்வொரு பணிக்குழுவின் அறிக்கையினைத் தொடர்ந்து அவையிலிருந்து எழுப்பிய கேள்விகளுக்கு அந்தந்த பணிக்குழு செயலர்கள் விளக்கம் அளித்தார்கள். தேநீர் இடைவேளைக்கு பிறகு மீண்டும் அறிக்கை சமர்ப்பித்தல் நிகழ்வு தொடர்ந்தது. கலந்துரையாடலின் போது நற்செய்தி பணிக்குழுவினர் துண்டு பிரசுரம் மூலம் நற்செய்தி அறிவிப்பது பற்றி பேசப்பட்டது. இதில் கைப்பிரதி வழங்குவதை தவிர்ப்பது நல்லது எனவும் நம்மிடம் உள்ள அமைப்புகளைப் பயன்படுத்தி சிறப்பாக நற்செய்தி பணி ஆற்ற வேண்டும் எனவும் பேசப்பட்டது. மரியாயின் சேனையினர் யூபிலி ஆண்டு முடிவிற்குள் அனைத்து குடும்பங்களையும் சந்தித்து செபிக்கவும், குடும்பங்களை செபிக்கின்ற குடும்பங்களாக செயல்பட வழிகாட்டவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு சார்பாக பொதுநிலையினர் பணிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சியளிப்பது பற்றிப் பேசப்பட்டது. அன்பிய பணிக்குழு சார்பாக மறைவட்ட அளவில் அன்பிய பொறுப்பாளர்களுக்குத் தொடர் பயிற்சி அளிப்பது பற்றி வலியுறுத்தப்பட்டது. விவிலியப் பணிக்குழு சார்பாக நேரடியாக விவிலியப் போட்டி எழுத்து தேர்வு நடத்துவது சிறப்பானதாக அமையும் என தெரிவிக்கப்பட்டது. மரியாயின் சேனையினர் குழந்தைகள், இளம்பெண்கள் மற்றும் அனைத்துப் பருவத்திலுள்ள பெண்களுக்கும் மரியாளைப் பற்றிய புரிதலை தரவேண்டுமென கருத்துப் பகிரப்பட்டது.

ஆயர் அவர்கள் தனது தலைமை உரையில் பணிக்குழுக்களின் செயலர்களையும் அவர்களதுப் பணிகளையும் பாராட்டினார்கள். பங்கு சந்திப்பின் போது பங்குதளங்களில் பணிக்குழுக்களின் செயல்பாடுகள் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்கள் (எ.கா: இளையோர் பணிக்குழு). பங்குகளில் இருந்து மக்களின் பங்கேற்பு குறைவாக இருப்பினும், தொடர்ந்து நமது பணிகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும் எனவும், பணிக்குழுக்களின் செயல்பாடுகள் திருப்தியாகவும் பலரை கவர்ந்திழுக்கும் விதமாகவும் அமைய வேண்டும் எனவும், கடவுள் நம்முடைய உழைப்பிற்கு ஏற்ற பலனை அருள்வார் எனவும் நமது ஆயர் அவர்கள் தெரிவித்தார்கள். காணொலி மூலம் அனைத்துப் பணிக்குழுக்களின் அறிக்கைகளை வழங்கியிருப்பது நல்ல முயற்சி என பாராட்டினார்கள். பெண்கள் பணிக்குழு செயலர் திருமதி. லில்லி ஆனந்த் அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். இறுதியாக பாப்பிறைப் பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

அருட்பணி. அ. பீற்றர்
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்

# இந்திய சிறைப்பணி - தமிழ்நாடு
# பாளையங்கோட்டை மறைமாவட்டம்

**மார்ச் - 2025 பணியறிக்கை**

மார்ச் 2025ல் ஒவ்வொரு வாரம் சனிக்கிழமை காலை 10.30 மணி முதல் 12.30 மணி வரை 3 தன்னார்வப் பணியாளர்கள் கொக்கிரகுளம் பெண்கள் தனிக் கிளைச் சிறை சென்று இல்லவாசிகளை சந்தித்து ஆற்றுப்படுத்தும் பணி நடைபெற்றது. 10,11 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு எழுதும் மத்திய சிறை, பாளையங்கோட்டையின் 30 சிறைவாசிகளுக்கு எழுதுப்பொருட்கள் (பேனாக்கள், பென்சில்கள், அளவுகோல்கள் மற்றும் அழிப்பான்கள்) வாங்கி கொடுக்கப்பட்டன. 08.03.2025 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் கொக்கிரகுளம் பெண்கள் தனிக்கிளைச்சிறை, 39 இல்லவாசிகளுடன் ‘அகில உலக பெண்கள் தினம்’ திருமதி. வசந்தி, சிறை கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தமிழ்தாய் வாழ்த்துடன் ஆரம்பமானது. திருமதி A. லீமா ரோஸ் மேரி, அனைவரையும் வரவேற்றார்கள். இல்லவாசிகளில் 8 பேர் நடனமாடி அனைவரையும் மகிழ்வித்தனர். சட்டப்புரிதல், சட்டத்தின் பயன்பாடு குறித்தும், போக்சோ (POCSO ACT) சட்டம் குறித்தும் வழக்குரைஞர் அருட் சகோதரி. சார்லஸ் மேரி அவர்கள் சட்ட விளக்கமளித்தார்கள். இல்லவாசிகள் அனைவரும் இணைந்து தன்னம்பிக்கையூட்டும் விழிப்புணர்வு பாடல் பாடினர். ஒருவருக்கொருவர் மகளிர் தின வாழ்த்துக்கள் பகிரப்பட்டது. இல்லவாசிகளில் ஒருவர் ‘பெண்களின் முன்னேற்றம்’ என்பது குறித்து உரையாற்றினார். இல்லவாசிகளை உற்சாகப்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. அனைவருக்கும் இனிப்பு, காரம் வழங்கப்பட்டது. திருமதி. K. ஸ்டார்லெட் மேரி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். 10.3.25, 17.3.25 மற்றும் 24.3.25 ஆகிய தேதிகளில் திரு. விக்டர்ராஜ், திரு. பாக்கியராஜ், திரு. கஸ்பார், அருட்சகோதரர் சார்லஸ் ஆகியோர் மத்திய சிறை, பாளையங்கோட்டை சிறைவாசிகளை சந்தித்து ஆற்றுப்படுத்தும் பணி செய்தனர். 24.3.25 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் யூபிலி மேய்ப்புப்பணி நிலையத்தில் நமது மறைமாவட்ட ஆயர் மேதகு ச. அந்தோனிசாமி ஆண்டகை தலைமையில் நடைபெற்ற அருட்பணிக் குழுக்களின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஒருங்கிணைப்பாளர், செயலர், பொருளாளர் கலந்து கொண்டனர். டிசம்பர் 2024 முதல் மார்ச் 2025 வரையுள்ள சிறைப்பணி அறிக்கை செயலரால் சமர்ப்பிக்கப்பட்டது.

அன்புடன்,

**திருமதி. S. ஜேசு மெர்சி ஏஞ்சலா**
**செயலர்**

**திருமதி. லீமா ரோஸ்**
**பொருளாளர்**

**அருட்திரு.F.ஞானப்பிரகாசம்**
**ஒருங்கிணைப்பாளர்**

## Parish & Shrine Contribution to the Diocese

| Sl. No. | Parish Name | Oct'2024 | Nov'2024 | Dec'2024 | Jan'2025 | Feb'2025 |
|---|---|---|---|---|---|---|
| 1 | Kovilpatti | 25,000.00 | 25,000.00 | 25,000.00 | - | - |
| 2 | Jawaharnagar | 25,000.00 | 25,000.00 | 25,000.00 | 25,000.00 | 25,000.00 |
| 3 | Puliampatti | 2,00,000.00 | 2,00,000.00 | 2,00,000.00 | 2,00,000.00 | 2,00,000.00 |
| 4 | Irudayanagar | 5,000.00 | - | - | - | - |
| 5 | Tenkasi | 45,000.00 | 45,000.00 | 45,000.00 | 45,000.00 | 45,000.00 |
| 6 | Kallidaikurichi | - | - | - | - | - |
| 7 | Shanthinagar | 15,000.00 | 15,000.00 | 15,000.00 | 15,000.00 | 15,000.00 |
| 8 | Kamanayakkanpatti | 20,000.00 | 20,000.00 | 20,000.00 | - | - |
| 9 | Palayamkottai | 10,000.00 | 10,000.00 | 10,000.00 | 10,000.00 | - |
| 10 | Diocesan Shrine | 1,00,000.00 | 1,00,000.00 | 1,00,000.00 | 1,00,000.00 | 1,00,000.00 |
| 11 | Singamparai | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | - | - |
| 12 | Irudayakulam | - | - | - | - | - |
| 13 | Venkatachalapuram | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 |
| 14 | Xavier Colony | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 | 5,000.00 |
| 15 | Kalvettankuzhi | 20,000.00 | 20,000.00 | 20,000.00 | 20,000.00 | 20,000.00 |

# PARISH MONTHLY COLLECTION
## (SEPTEMBER TO DECEMBER – 2024)

| S.No | Parish Name | Bible Sunday Sep'2024 | Mission Sunday Oct'2024 | African Mission Nov'2024 | Communio Dec'2024 |
|---|---|---|---|---|---|
| 1 | Agarakattu | 4,320.00 | 18,000.00 | 4,357.00 | 4,477.00 |
| 2 | Alangulam | 1,500.00 | 9,000.00 | 1,500.00 | 1,500.00 |
| 3 | Alavanthankulam | 2,790.00 | 27,695.00 | - | - |
| 4 | Ambasamuthuram | 4,550.00 | 66,000.00 | 4,300.00 | 4,100.00 |
| 5 | Avudayanoor | 2,230.00 | 75,500.00 | 2,360.00 | 3,080.00 |
| 6 | Cheranmahadevi | 6,192.00 | 76,163.00 | 5,590.00 | 6,152.00 |
| 7 | Chidambarapuram | 1,121.00 | 40,000.00 | 2,059.00 | 1,509.00 |
| 8 | Duraisamypuram | 750.00 | 7,200.00 | 900.00 | 800.00 |
| 9 | Ilayarasanendal | - | 30,370.00 | - | - |
| 10 | Iruthayakulam | 3,800.00 | 23,000.00 | 4,510.00 | 4,653.00 |
| 11 | Iruthayanagar | - | 71,000.00 | - | - |
| 12 | Jawaharnagar | 19,842.00 | 7,51,000.00 | 23,745.00 | 22,171.00 |
| 13 | Kadayam | 3,120.00 | 14,970.00 | 1,500.00 | 2,000.00 |
| 14 | Kallidaikurichy | 4,660.00 | 15,000.00 | - | - |
| 15 | Kalugumalai | 5,420.00 | 1,90,280.00 | 6,200.00 | 6,540.00 |
| 16 | Kamanayakanpatti | 7,355.00 | 60,120.00 | 8,570.00 | 8,150.00 |
| 17 | Karuthapillaiyur | 3,434.00 | 10,500.00 | 3,886.00 | 2,450.00 |
| 18 | Kayathar | 2,180.00 | 35,800.00 | 4,500.00 | 3,010.00 |
| 19 | Kovilpatti | - | 1,05,000.00 | - | - |
| 20 | Kuruvikulam | 850.00 | 5,800.00 | 1,100.00 | 2,200.00 |
| 21 | KTC Nagar | 3,500.00 | 46,785.00 | 3,500.00 | 3,500.00 |
| 22 | Maharajanagar | 7,931.00 | 50,000.00 | 7,267.00 | 7,543.00 |
| 23 | Melailandaikulam | 1,400.00 | 17,000.00 | 1,200.00 | 1,170.00 |
| 24 | MelaMeignanapuram | 800.00 | 25,710.00 | 800.00 | 2,800.00 |
| 25 | Nallatinputhur | 2,160.00 | 10,170.00 | 2,500.00 | 2,400.00 |
| 26 | Nettur | 1,500.00 | 20,580.00 | 1,000.00 | 1,000.00 |
| 27 | Palayamchettikulam | 670.00 | 36,190.00 | 770.00 | 710.00 |
| 28 | Palayamkottai | 25,542.00 | 3,80,218.00 | 20,171.00 | 20,971.00 |
| 29 | Pandarakulam | 1,000.00 | 3,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 30 | Pavoorchatram | 2,030.00 | 34,020.00 | 2,090.00 | 11,600.00 |
| 31 | Pettai | 3,208.00 | 16,800.00 | 3,340.00 | 3,660.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 32 | Puliankudi | 3,650.00 | 20,000.00 | 3,450.00 | 3,390.00 |
| 33 | Puliampatti | 7,210.00 | 35,891.00 | 7,050.00 | 7,930.00 |
| 34 | Sankarankoil | 800.00 | 26,000.00 | 650.00 | 530.00 |
| 35 | Sankarnagar | 1,754.00 | 18,000.00 | 2,424.00 | 2,550.00 |
| 36 | Sendamaram | 2,215.00 | 61,650.00 | 2,050.00 | 2,310.00 |
| 37 | Shanthinagar | 2,000.00 | 1,20,945.00 | 2,000.00 | 2,000.00 |
| 38 | Singamparai | 4,225.00 | 35,600.00 | 4,535.00 | 4,810.00 |
| 39 | Surandai | 1,747.00 | 16,157.00 | 1,840.00 | 1,880.00 |
| 40 | Tirunelveli Town | 3,577.00 | 55,200.00 | 5,392.00 | 4,414.00 |
| 41 | Tenkasi | 9,888.00 | 1,01,491.00 | 10,209.00 | 8,272.00 |
| 42 | Uthumalai | 2,080.00 | 18,000.00 | 2,140.00 | 2,100.00 |
| 43 | Vadiyoor | 2,000.00 | 26,000.00 | 4,400.00 | 2,100.00 |
| 44 | Vandanam | 607.00 | 30,112.00 | 501.00 | 508.00 |
| 45 | Veeravanallur | 2,400.00 | 45,000.00 | 2,500.00 | 3,000.00 |
| 46 | Velayuthapuram | 967.00 | 10,500.00 | 1,297.00 | 1,725.00 |
| 47 | Venkatachalapuram | 1,570.00 | 30,500.00 | 2,122.00 | 2,120.00 |
| 48 | Vickramasingapuram | 5,000.00 | 20,000.00 | 5,000.00 | 5,000.00 |
| 49 | Xavier Colony | 3,240.00 | 70,680.00 | 3,530.00 | 3,144.00 |
| 50 | Thalarkulam | 1,341.00 | 1,397.00 | 6,000.00 | 1,300.00 |
| 51 | Nalamkattalai | 825.00 | 9,200.00 | 1,250.00 | 1,295.00 |
| 52 | Kalvettankuli | 3,500.00 | 24,105.00 | 3,500.00 | 3,500.00 |
| 53 | Shencottai | 1,000.00 | 8,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 54 | Vallam | 2,000.00 | 21,200.00 | 2,050.00 | 2,050.00 |
| 55 | Vaikalipatti | 1,140.00 | 17,110.00 | 1,517.00 | 1,559.00 |
| 56 | Sivagiri | 990.00 | 10,400.00 | 1,100.00 | 1,131.00 |
| 57 | Rengasamuthiram | 420.00 | 13,860.00 | 420.00 | 420.00 |
| 58 | Kammapatty | 1,780.00 | 60,005.00 | 1,644.00 | - |
| 59 | SDS Sisters | | 1,000.00 | | |
| 60 | Education Commission | | 2,50,000.00 | | |
| | Total | 1,91,781.00 | 34,31,374.00 | 1,98,286.00 | 1,99,184.00 |

We appreciate and thank all the Parish Priests and Parishioners for their valuable contribution.

We specially thank the Parish Priests and the Parishioners of Jawaharnagar, Palayamkottai,

Education Commission, Kalugumalai, Shanthinagar, Kovilpatti, Tenkasi, who have made a higher contribution.

# ஆயரின் நல நிதிகள்

**மார்ச் - 2025**

| குருமாணவர் நிதி | |
|---|---|
| திருமதி. A. ஜோஸ்பின் ஜெகதீஷ், கே.டி.சி. நகர் | 25,000.00 |
| திரு. ஜான் பிரிட்டோ | 6,000.00 |
| திருமதி. மரிய செல்வமேரி | 1,000.00 |
| திருமதி. எலிசபெத் பிலிப் | 500.00 |
| மொத்த இருப்புத்தொகை | 32,500.00 |
| **இம்மாதம் வழங்கியது** | **32,500.00** |
| **ஏழை மாணவர் கல்வி நிதி** | |
| மொத்தக் கையிருப்பு | 3,06,212.00 |
| இம்மாதம் வழங்கியது | 30,000.00 |
| **மொத்த இருப்புத்தொகை** | 2,76,212.00 |
| **குடும்ப நல நிதி** | |
| திருமணத் திருப்பலி வழியாக | 15,000.00 |
| முன் கையிருப்பு | 5,92,647.00 |
| மொத்தக் கையிருப்பு | 6,07,647.00 |
| இம்மாதம் வழங்கியது | 10,000.00 |
| **மொத்த இருப்புத்தொகை** | **5,97,647.00** |
| **மருத்துவ நல நிதி** | |
| முன் கையிருப்பு | 1,08,896.00 |
| இம்மாதம் வழங்கியது | 7,000.00 |
| **மொத்த இருப்புத்தொகை** | **1,01,896.00** |
| **நற்செய்திப் பணி நிதி** | |
| **மொத்த இருப்புத்தொகை** | **2,14,749.00** |
| **விவிலிய நிதி** | |
| **மொத்த இருப்புத்தொகை** | **1,58,620.00** |
| **மறைமாவட்ட சிறப்பு நிதி** | |
| திருப்பலி வழியாக | 21,000.00 |

## BISHOP EMERITUS JUDE PAULRAJ'S ENGAGEMENTS

**April - 2025**

| Date | Time | Programme |
|---|---|---|
| 05.04.2025 | 07.00 PM | Mass, Kallikulam |
| 13.03.2025 | 07.30 AM | Palm Sunday Service, Shanthinagar |
| 17.04.2025 | 05.30 PM | Maundy Thursday Service, Thirumoolanagar |
| 18.04.2025 | 03.00 PM | Good Friday Service, Thirumoolanagar |
| 20.04.2025 | 12.05 AM | Easter Vigil Mass, Cathedral, Palayamkottai |
| 22.04.2025 | 05.30 PM | Consecration of Panagudi Church |
| 25.04.2025 | 04.00 PM | Wedding Mass, Vellore |
| 26.04.2025 | 10.00 AM | Platinum Jubilee Mass, St. Xavier's B.Ed. College |
| 28.04.2025 | 06.00 AM | Feast Mass, Panagudi |
| 30.04.2025 | 05.30 PM | Priestly Ordination, Royappanpatty |

**+ Jude**



உதவிய உள்ளங்களுக்குச் செபங்களையும்
நன்றிகளையும் உரித்தாக்குகிறோம்.



Edited and Published by: Rev. Fr. F. Gnanapragasam, the Chancellor,
Catholic Bishop's House, P.O.Box No.108,
John Paul Nagar, PALAYAMKOTTAI - 627 002. Tel : 0462 - 2522114, Mobile : 9443582207
Printed at : Fatima Printing Press, Palay. Tel : 0462 - 2580970.
(Private Circulation only)
E-mail : rcdiopalayamkottai@yahoo.com web: www.palayamkottaidiocese.org
bishop@playamakottaidiocese.org chancellor@palayamkottaidiocese.org

**Way of the Cross and Mass, Cathedral 23.03.2025**







**Coordination of Commissions Meeting, JPC, Palayamkottai 24.03.2025**





# Wishing you a joyful Easter!




**For Private Circulation only**

**Edited & Published by**

**Rev. Fr. F. GNANAPRAGASAM**

**CHANCELLOR, CATHOLIC BISHOP'S HOUSE, P.B.No. 108, PALAYAMKOTTAI-2**

**e-mail : chancellor@palaymkottaidiocese.org**

**Web : www.palayamkottaidiocese.org**